[14th December 1959

(b) whether an enactment is proposed to be made to bring charitable institutions (Mutts) under the control of the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A list [a] is placed on the table of the House.

(b) By the term Charitable Institutions (Mutts) the member presumably means charitable endowments. There is no proposal to bring straight-away within the purview of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1951, all the Hindu public charitable endowments. Under section 3 of the Act, the provisions of the Act can be extended to a public charitable endowment only if it is being mismanaged and if Government are satisfied that in the interests of the administration of such endowment, it is necessary to extend all the provisions of the Act to the said endowment. Provision has also been made in the Hindu Religious and Charitable Endowment Bill, 1959, which has been passed by the legislature to bring within the purview, a charitable institution under section 3 of the Act, where the trustee or trustees of charitable institutions voluntarily apply for or express their willingness to the extension of the provisions of the Hindu Religious and Charitable Endowments Act.

SRI P. G. MANICKAM : ஸார், அநேக கோயில்களுக்குப் போதுமான தானிய வருவாய் இருக்கிறது. ஆகவே, அந்தக் கோயில்களிலேயும் இந்த இலவச உணவு கொடுக்க, மீதியாகியுள்ள தானியங்களை வசூல் செய்ய அரசாங்கம் ஒரு திருத்தத்தைச் செய்ய முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்து அறநிலையப் பாதுகாப்பு இலாகா கோயில்களில் இருந்து ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை சொல்லியிருக்கிறது. அம்மாதிரி நான் குறிப்பிட்ட ஆலயங்கள் ஏற்றுக்கொண்ட மாதிரி மற்ற ஆலயங்களும் பின்பற்றலாம்.

Separate Food Zone

* 170 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that the Union Government have finally refused to form a separate Food Zone for Madras State ; and

(b) if so, the steps proposed to be taken by the Government to bring down the price of rice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) No new steps are proposed to be taken by this Government to bring down the price of rice. The opening of Fair Price shops has already had the effect of lowering the price of rice in the open market. These Fair Price shops are proposed to be continued, with the stocks locally procured and the allotments assured by the Government of India.

---

[a] Printed as Appendix II on pages 114–115 infra.

14th December 1959]

SRI A. A. RASHEED : Sir, have the Government given up the idea to form a separate zone for Madras and may I know the reason that weighed with the Government of India in not acceding to our request to form a separate zone?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of giving up this idea. I have already explained while replying to the debate on the Governor's Address the circumstances under which the Government of India are not agreeing to have the State constituted into a separate food zone.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, தென் உணவு மண்டலத்தைக் கலைத்து தனி மண்டலமாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசாங்கம் நிராகரித்ததானது இந்த அரசாங்கத்தை அவமதித்ததாகும் என்று இந்தச் சபையிலும் மேல்சபையிலும் சொல்லியிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்த ராஜ்யத்தை மறுபடியும் தனிமண்டலமாக்க வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தப் போகிறதா? அல்லது மத்திய சர்க்காருடைய முடிவை ஏற்க முடிவு செய்து விட்டதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி நான் இந்த மன்றத்திலே முன்பே விளக்கியிருக்கிறேன். மற்றொரு மன்றத்திலும் விளக்கியிருக்கிறேன். இதைத் தனி மண்டலமாக்குவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் மட்டும் முடிவு செய்வதல்ல. நான்கு தென் ராஜ்யங்களும் சேர்ந்தது இந்த உணவு மண்டலம். இந்தத் தென் உணவு மண்டலத்தை ஏற்படுத்தியது மத்திய அரசாங்கந்தான். ஆனால் இப்போது தனியாகப் பிரிய இரண்டு ராஜ்யங்கள் ஒப்புக்கொள்ளாதபோது மத்திய அரசாங்கத்தால் இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பிரிப்பதில் சங்கடம் இருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், தனியாகச் சென்னை இயங்குவதற்கு மத்திய சர்க்கார் இணங்காவிட்டாலும் எந்தக் காரணத்தினால் நாம் தென் மண்டலத்தில் இருந்து பிரியவேண்டுமென்று கோரினோமோ அதில் உள்ள கஷ்டங்களை நிவர்த்திக்க ஓரளவு மத்திய சர்க்கார் இணங்கினார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றியெல்லாம் மத்திய அரசாங்கத்தோடு கலந்து பேசப்பட்டு வருகிறது.

Rice and wheat

* 171 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to supplementary Question once No. 565, answered on the 4th March 1959—

(*a*) the total quantity of wheat allotted to the State by the Central Government in 1958; and

(*b*) the total quantity of rice allotted in 1957–58?